'தினத்தந்தி'
- 29-07-2015 -



விபத்தில் பலியானவரின் குடும்பத்திற்கு

# ரூ.2 லட்சம் இழப்பீட்டு தொகை

## பல்லவன் வங்கியில் வழங்கப்பட்டது

சேலம், ஜூலை,29–

பிரதமரின் சுரக்‌ஷா பீமா யோஜனா திட்டத்தின் கீழ் சேலம் கிச்சிப்பாளையத்தில் உள்ள பல்லவன் வங்கி கிளையில் வாடிக்கையாளர் செம்பண்ணன் இணைந்திருந்தார். சமீபத்தில் அவர் விபத்தில் மரணம் அடைந்தார். அவரது மரணம் பற்றிய விவரம், இழப்பீடு காப்பீட்டு விண்ணப்பம் ஆகியன தலைமை அலுவலகத்திற்கு கடந்த 25–ந் தேதி அனுப்பப்பட்டது. உயிரிழந்த செம்பண்ணனின் குடும்ப வாரிசுகளுக்கு விபத்து இழப்பீடு தொகையாக ரூ.2 லட்சம் வழங்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கார்பரேசன் லிமிடெட் நிறுவனம் முன்வந்தது. உயிரிழந்த செம்பண்ணனின் வாரிசுதாரர்களுக்கு இழப்பீடு தொகை வழங்கும் நிகழ்ச்சி பல்லவன் வங்கியில் நேற்று மாலை நடந்தது. நிகழ்ச்சியில் பல்லவன் கிராம வங்கி தலைவர் எஸ்.சுரேஷ்குமார், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் மண்டல முதன்மை மேலாளர் அப்துல்அசீஸ் ஆகியோர் கலந்து கொண்டு காப்பீட்டுத்தொகைக்கான காசோலையை வழங்கினர். இதில் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் மண்டல மேலாளர் அழகப்பன், கோட்ட மேலாளர் வெங்கடேசன், உதவி மேலாளர் ராமச்சந்திரன் மற்றும் வங்கி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பல்லவன் கிராம வங்கியின் தலைவர் எஸ்.சுரேஷ்குமார் கூறுகையில்,"பல்லவன் கிராம வங்கியில் பிரதம மந்திரியின் சுரக்‌ஷா பீமா யோஜனா, பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் அடல் ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது. பிரதமரின் ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்தின்கீழ் இதுவரை 37,192 சந்தாதாரர்களும், பிரதமரின் சுரக்‌ஷா பீமா யோஜனா திட்டத்தின்கீழ் 1,52,861 சந்தாதாரர்களும், அடல் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 251 சந்தாதாரர்களும் பதிவு செய்துள்ளனர்" என்றார்.